செம்பாக்கம் நகராட்சியில் 14.7.2020ம் நாள் செவ்வாய்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற அவசரக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.

கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி: திருமதி. கா. ராஜலட்சுமி
தனி அலுவலர் / ஆணையாளர்
செம்பாக்கம் நகராட்சி

பொருள் எண்.1

அ) செம்பாக்கம் நகராட்சிக்கு, தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2020–21ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | Ward No | Name of the Work | Length (in km) | Estimate Amount (Rs. in Crore) |
|---|---|---|---|---|
| 1 | 1,2,3,7, 10 and 12 | Providing BT Surface to<br>**Ward No.1** Erikarai Street<br>**Ward No.2** Gnanaraja Salai, Vivekanandhar 4th Cross Street, R.B. Avenue 2nd Cross Street, Sam Avenue Rukmani Street and R.B. Avenue 1st Street<br>**Ward No.3** Lakshmikanthan Street**,**<br>**Ward No.7** Sivasakthi Nagar Extn,Saravana Nagar 5th Street, Sivasakthi Nagar 1st Street and Yogeswari Nagar Main Road<br>**Ward No.10** Kambar Street, Ezhil Nagar Main Road and<br>**Ward No.12** Maraimalai Adigal Street | 2.043 | 0.90 |

ஆ) மேலும் இப்பணிக்கான நிதி ஆதாரங்களை கீழ்காணும் விகிதாசார அடிப்படையில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ரூ.கோடியில்)

| மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|
| 0.900 | 0.675 | 0.225 |

**அலுவலக குறிப்பு**:

1. அ) மற்றும் ஆ) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2020–21-ன் கீழ் மேற்கொள்ளவும், அதற்கான நிர்வாக அனுமதி பெறவும், நிதி ஒதுக்கீடு தொகை போக நகராட்சியின் பங்களிப்பு தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.669** **அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.2

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் நகராட்சி பகுதியில் உள்ள 16585 வீடுகள் 927 கடைகள் மற்றும் காலி மனைகள், புதியதாக கட்டுமானங்கள் மேற்கொள்ளும் இடங்கள், நாள்பட்ட மக்கள் பயன்பாடில்லா கட்டிடங்கள், நாள்பட்ட பூட்டிய குடியிருப்புகள், கோயில்கள், மசூதிகள், சர்ச், பார்க்குகள் மற்றும் இதர அரசு மற்றும் அரசு சாரா கட்டிடங்கள், கல்விக்கூடங்கள் இன்னபிற இடங்களில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகி டெங்கு, சிக்கன் குன்யா, மலேரியா, யானைக்கால் போன்ற பூச்சிகள் மூலம் பரவும் வியாதிகளை தடுக்கும் விதமாக DBCக்களை கொண்டு பணி மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜெ1 நாள் 17.9.2018ன் படி, மாவட்ட ஆட்சியர் விலை விகிதத்தில் 55 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுடன் 10 பேர் Rapid Response Team (RRT) டெங்கு தடுப்பு நடவடிக்கை (டெங்கு காய்ச்சல் கண்ட பகுதிகளில்) விரைவு செயலாக்க குழுவிற்கு 10 பேர் சேர்த்து 65 DBCக்களை (Outsourcing) நியமித்து கொள்ள ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் மெஸ்ஸர்ஸ் எஸ்.பி. அன்டு கோ நிறுவனம் மூலம் முதற்கட்டமாக மூன்று மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்திக் கொள்ள உத்திரவு வழங்கப்பட்டு அதன் பின்னர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 14.7.2020ம் தேதியுடன் முடிவடைவதாலும், கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாலும், இப்பணியாளர்களை கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திடவும், புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி தொடர்ந்து செயல்படுத்த காலதாமதம் ஏற்படும் வகையில், அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் மூலம் 90 நாட்களுக்கு (15.7.2020 முதல் 13.10.2020 வரை) கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான மூன்று மாத செலவினத் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகிதத்தில் மற்றும் ஒப்பந்ததாரர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத் தொகையினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.670** அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி